# “ஒரு நாள் ஜெபமாலையையும், உத்தரியத்தையும் கொண்டு தேவமாதா உலகத்தை இரட்சிப்பார்கள்”

**-அர்ச். சாமிநாதரின் தீர்க்கதரிசனம்.**

கத்தோலிக்க விசுவாசம் தழைத்தோங்கிய மத்தியக் காலக்கட்டத்தில்ää உரோமையில் மூன்று தேவ ஊழியர்கள் சந்தித்துக் கொண்டார்கள். போதக சபையின் ஸ்தாபகரான அர்ச்.சாமிநாதர், சுவிசேஷ தரித்திரத்தை வாழ்வாகக் கொண்ட அர்ச். பிரான்சிஸ் அசிசியார், தமது பிரசங்கத் திறமைக்காக உரோமைக்கு அழைக்கப்பட்ட பாலஸ்தீன நாட்டு கார்மெல் சபை துறவி அர்ச். ஜெருசலேம் ஆஞ்சலூஸ் ஆகியோரே அவர்கள்.

முன்பின் எந்தவிதமான அறிமுகம் இல்லாத போதிலும் இஸ்பிரீத்துசாந்துவானவரின் ஒளியில் ஒருவர் மற்றவர்கள் யார் என்பதை அறிந்துகொண்டார்கள். இவர்கள் சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கும்போது, ஒருவர் மற்றவரை நோக்கி தீர்க்கதரிசனம் கூறலானார்கள்! அர்ச்.ஆஞ்சலூஸ் அர்ச். பிரான்சிஸ் அசிசியார் பெறவிருக்கும் ஐந்து காயங்களால் நமதாண்டவரின் பாடுகளில் பங்கேற்கவிருப்பதையும் அறிவித்தார். அர்ச்.சாமிநாதரோ கார்மெல் சபை துறவியை நோக்கி, “**சகோதரரே, ஒருநாள் பரிசுத்த கன்னிமாமரி உங்கள் சபைக்கு உத்தரியம் என்ற பக்தி முயற்சியை வழங்குவார்கள். எங்கள் சபைக்கோ ஜெபமாலையை கொடுப்பார்கள். ஒருநாள் ஜெபமாலையையும் உத்தரியத்தையும் கொண்டு அவர்கள் உலகத்தை இரட்சிப்பார்கள்**” என்று கூறினார்.

மேற்கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறும்வகையில் நம் தேவமாதா உத்தரியம் என்ற விலைமதிப்பில்லா பொக்கிஷத்தை கார்மெல் சபைக்கு வழங்கினார்கள். அது எப்படியெனில், 1238-ல் கார்மெல் சபை மிகுந்த சோதனைக்குள்ளாகியது. சூழ்ந்து வந்த துன்பங்களில் சபை நீடிப்பதே பெரும் சிரமமாகிப்போனது. எலியாஸ் தீர்க்கதரிசியால் பாலஸ்தீன நாட்டில் கார்மெல் மலையில் தோற்றுவிக்கப்பட்டு காலம் காலமாக அங்கே ஜெப தவத்திலும், தேவதாயை புகழ்வதிலும் ஈடுபட்டு வந்த அச்சபை துறவிகள் சிலுவைப்போரின் போது முகமதியர்களால் நாடுகடத்தப்பட்டு விரட்டப்பட்டார்கள். அதனால்

ஐரோப்பிய நாடுகளுக்கு குறிப்பாக இங்கிலாந்து நாட்டிற்கு வந்த அவர்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள். புதிய இடம், புதிய காலநிலை என்ற நிலையில் எந்தவிதமான உதவியுமின்றி அலைந்து திரிந்துகொண்டிருந்தார்கள். அதனால் ஞான இருள் சூழ்ந்து தங்கள் தேவ அழைத்தல்களை இழந்துவிடும் அபாயத்தில் அத்துறவிகள் உழன்று வந்தனர்.

அச்சபையின் (இங்கிலாந்து நாட்டு) சிரேஷ்டராக இருந்த அர்ச்.சைமன் ஸ்டாக் தனது சபையின் நிலைகண்டு பெரிதும் வருந்தி கார்மெல் கன்னிகையான மரியாயிடம் மன்றாடினார். அவர்களுடைய அன்பின் அடையாளத்தை, மோட்ச பரிந்து பேசுதலை தந்து தமது சபையைக் காக்க வேண்டுமென்று இறைஞ்சி வேண்டினார். அவரது மன்றாட்டு கேட்கப்பட்டது.

1251 ஜுலை 16-ம் நாள் தேவமாதா ஒரு பதிலைத் தந்தார்கள். கணக்கற்ற சம்மனசுக்கள் புடைசூழ தேவபாலனோடு அர்ச். சைமன் ஸ்டாக்கிற்கு காணப்பட்டார்கள். உத்தரியத்தை கையில் ஏந்தியவர்களைய், மிகுந்த இரக்கத்தோடும், அன்போடும் அவரை நோக்கி, “இந்த உத்தரியத்தைப் பெற்றுக்கொள். உனக்கும், உமது சபையினருக்கும் கொடுக்கப்படும் விசேஷ சலுகை! **இதை அணிந்து கொண்டு மரிக்கிறவர்கள் நித்திய நெருப்பில் விழ மாட்டார்கள்**. இது இரட்சண்யத்தின் ஒரு அடையாளம். ஆபத்தில் ஒரு பாதுகாப்பு. சமாதானத்தின் பிணை” என்று கூறி அதனை அவருக்குக் கொடுத்தார்கள். உத்தரியத்தால் கார்மெல் சபை காப்பாற்றப்பட்டது. சபை துறவிகள் அதன் வல்லமையைக் கண்டார்கள். அதனால் ஞான உதவியையும், தேவமாதாவின் தப்பாத மன்றாட்டையும், பாதுகாவலையும் பெற்றார்கள். உத்தரியத்தின் வல்லமையைக் கண்டுகொண்ட திருச்சபை அதனை விசுவாசிகளும் அணிந்து, பயன்பெற அவர்களைத் தூண்டியது. அநேக பாப்புமார்கள் உத்தரிய பக்தியை ஆதரித்து அதற்கு எண்ணற்ற ஞானப்பலனகளை வழங்கியுள்ளார்கள். பாப்பரசர் 15-ம் ஆசீர்வாதப்பர் உத்தரியம் தேவமாதாவின் கவசம் என்று கூறுகிறார்.

**அர்ப்பணிப்பின் அடையாளம்!**

உத்தரியம் அணிவது தேவதாய்க்கு நமது அர்ப்பணிப்பின் அடையாளமாக இருக்கிறது. பாத்திமாவில் தமது மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணமாதலைக்

கேட்டுக்கொண்ட தேவமாதா 1917 அக்டோபர் 13-ம் நாள் நடந்த தமது இறுதிக்காட்சியில் உத்தரிய மாதாவாகக் கையில் உத்தரியத்தை ஏந்தியவர்களாகக் காணப்பட்டார்கள். மாதாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் முக்கிய அடையாளம் கார்மெல் உத்தரியத்தை அணிந்திருப்பது என்பதை இதன் மூலம் சுட்டிக் காட்டுகிறார்கள்.

கிறீஸ்தவர்களே! நாம் சர்வேசுரனின் “சுவீகார மக்கள்” என்ற நமது அந்தஸ்தை தேவ இஷ்டப்பிரசாதம் (Sanctifying Grace) என்ற வரப்பிரசாத உள்ளரங்க ஆடையை அணிந்திருப்பதால் என்பிக்கிண்றோம். அதே போல், நாம் மாதாவின் மைந்தர்கள் என்பதையும், நாம் முற்றிலும் அவர்களுக்குச் சொந்தமானவர்கள் என்பதை காண்பிக்க வெளியரங்க ஆடையாக உத்தரியத்தை அணிந்து கொள்வோம்.

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குச் செய்யப்படும் நிந்தையில், “**மாதாவின் பக்திப்பொருட்களை அவமதித்து அகற்றுவது ஒன்று**” என்பதை நினைவில் கொண்டு அதற்குப் பரிகாரமாக நாம் மாதாவின் உத்தரிய பக்தியை முதலில் அநுசரிப்போம். அதனை பக்தியோடு அணிந்து நம்மை அவர்களுக்கு அர்ப்பணித்து வாழ்வோம். பின்னர் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு அதனை பரப்புவோம். இதனால் தேவதாயின் பாதுகாப்பில் அடைக்கலம் கொள்வோமாக!